# திறக்கப்படாத தீப்பெட்டிகள்



1737

JPL
C1737

மு.கி.அ.ஜப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 66 N

# திறக்கப்படாத தீப்பெட்டிகள்

Nallur Branch Library

1737 ZEY

KOHA JPL

கவிதைகள்

மு. இ. அ. ஜப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறக்கப்படாத தீப்பெட்டிகள்
□
கவிதைகள்
□
மு. இ. அ. ஜப்பார்
□
உரிமை: ஆசிரியருக்கு
□
முதற்பதிப்பு: 1986, செப்டம்பர்
□
விலை: ரூபா 15-00
□
அச்சுக்கலை: ஸ்ரீ காந்தா அச்சகம்
□ 213, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம்.

894'8711

## சமர்ப்பணம்

வாழ்க்கையைப் புரிந்துகொள்ள
நான் நடந்துவந்த வழிநெடுகிலும்
தடைகளாய் இல்லாமல்
தாண்டிச்செல்லும் படிகளாய்
அமைந்த எனது தாய்க்கும் சகோதரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையும் கவிதையும்

## மு. இ. அ. ஜப்பாரின் இந்தக் கவிதைத் தொகுதிக்கான முன்னுரை வாசகங்கள்

ஜப்பார் என்னிடம் இந்த முன்னுரையைக் கேட்ட முறைமையை நான் பின்னோக்கிச் சிந்தித்த பொழுது மனச்சிலிர்ப்பை ஏற்படுத்தியது. ஜப்பார் என் வகுப்புகளுக்கு வருபவர் அல்லர். இதற்கு முன்னர் அவரை நான் தனிப்படவும் அறியேன்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் ஒருநாள் மத்தியானத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் வேளையில் வகுப்பு ஒன்றுக்குச் சென்று கொண்டிருந்த பொழுது திடீரென வந்து "சேர், நீங்கள் ஒரு முன்னுரை தர வேண்டும்" என்றார். அதில் கெஞ்சல் தொனி இருக்கவில்லை. ஓர் உரிமைத்தொனி தான் இருந்தது. மாணவர் லரின் கவிதைகளைத் தொகுதியாக்குகின்றார்கள் என்றே நினைத்தேன். மாணவர் அவையின் கோரிக்கைத்தொனியில் தான் வேண்டுகோளும் இருந்தது.

பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவமே இந்த உரிமையுணர்வினுள்தான் குடிகொண்டிருக்கிறது. அது ஒரு குழுமம். (Community) புலமைக் குழுமம். எல்லோரும் எல்லோருக்கும் உறவினர்கள்.

யாழ்ப்பாணத்துக் கல்வி மரபின் 'சயன்ஸ்' 'ஆர்ட்ஸ்' கிளைப்பாடு இந்தக் குழும உணர்வுக்குப் பெரிதும் ஊறு செய்வதுண்டு. பீடத்துக்குப் பீடம் துறைக்குத்துறை அந்நியப்பட்டுப் போய்க் கிடக்கும் மாணவர்கள் பலர் இந்தப் புலமைக் குழுமத்தின் (Intellectual Community) முழுப்பயனையும் பெறுவதில்லை. ஜப்பார் முகாமைத் துறை மாணவன். இந்தக் குழும உணர்வுடன் என்னிடம் நேரே வந்தது என்னைப் பெரிதும் கவர்ந்தது. கவர்ந்ததைவிட நெகிழ வைத்ததே கூட.

KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பாரின் இந்த அணுகு நெறியில் பல்கலைக்கழக முதற்பட்ட மாணவனின் இலட்சிய வேகத்தையும் பர பரப்பையும் காண முடிந்தது. பல்கலைக்கழகப் பயிற்சி பெற்றோரிடையே முதற்பட்ட மாணவக் காலம் (Under Graduate days) ஆர்வத்துக்கு முதலிடம் கொடுக்கும் காலம். வெளிச்சத்திலும் பார்க்க வெப்பம் அதிகமாக விருக்கும் உணர்வுகளை ஒழிக்காது வெளிக்காட்டும் காலம். சோமு கூறியது போன்று "பரிதியின் மேலும் இந்தப் பால் நிலா மேலும் தானே உறுதிகள் கோடி செய்யும் காலம். உன் பித்தராய் இருக்கும் காலம். இருக்க வேண்டிய காலம்"

இந்த மனோநிலை ஆரம்ப காலக்கவிதை முகிழ்ப்புக்கு முக்கியமாகும் ஒரு உணர்ச்சிப் பின்னணி ஆகும். ஆரம்ப காலக்கவிதை ஆக்கத்துக்கு 'உணர்ச்சிக்கு ஆட்படுகை' ஒரு முக்கிய முதலீடு (முக்கிய குறிப்பு: உண்மையான கவிஞனாக தோற்கிளம்புவதற்கு இந்த உணர்ச்சிக்கு ஆட்படுகை ஊறு செய்யும். அக்கட்டத்தில் உணர்ச்சிகளை உணர்ந்து கொள்வது முக்கியத்துவமாகின்றது. உணர்ந்து கொள்வது என்பது ஒரு சிந்தனைத் தொழிற்பாடு ஆகும்) இந்த முதலீட்டு நிலையில்தான் ஜப்பாரின் வருகை அமைந் திருந்தது. இந்த மனோநிலை கவிதையாக்கம் பற்றிய முக் கிய வினாவைக் கிளப்புகின்றது.

இளமைக்கும் கவிதை வெளிப்பாட்டுக்கும் தொடர்பு உண்டா?

புனைகதையாசிரியர்களின் வரலாற்றை நோக்கும் பொழுது முக்கியமான சில நாவலாசிரியர்கள் நடுத்தர வயதின் பின்னரும் தம் ஆற்றலைத் தாம் கண்டு பிடித் துக் கொண்டவர்களாயும் அமைவதைக் காணலாம். நாட காசிரியர்களிற் கூடப் பலர் இளமை கழிந்த பின்னரே நாடகாசிரியர்களாகப் பரிணமித்துள்ளார்கள். ஆனால் கவிஞர்களைப் பொறுத்த வரையில் தமது இளவயதில் கவிதை நாட்டம் இல்லாதவர்கள் தமது நடுத்தர வய திற் கவிஞர்களாக முகிழ்த்திருக்கிறார்களா என்பது சந் தேகமே. (புலமை வேறு கவியாக்கத்திறன் வேறு, இவை யிரண்டையும் ஒன்றென மயங்குதல் தவறு) இளவயதில் கவியாக்கத்திறனிருந்து பின்னர் அது படிப்படியாக வற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9470) 7

றிப் போய் பிற (எழுத்துத்) துறையிற் கவனஞ் செலுத்தியவர்கள் உண்டே தவிர, சிறுவயதிற் கவிதா நெஞ்சம் இல்லாதவர்களாயிருந்து அதனை நடுவயதுகளில் வளர்த்துக் கொண்டவர்கள் இல்லை என்றே கூறலாம். இந்த உண்மைக்குள் கவிதை பற்றிய முக்கியமான ஓர் ஆக்க வியற்பண்பு தொக்கு நிற்கின்றது.

கவிதை என்பது உணர்ச்சி நிலையின் மொழி. உணர்வு நிலையொன்றுக்கு ஆட்பட்டு நிற்கும் நிலையில் வெளி வரும் பேச்சின் தொனிக்குள் அது கூடுகட்டி நிற்கும். உணர்ச்சிக்கு ஆட்படுகை அதற்கு முக்கியமானது. (அத னுள் முற்று முழுகி விடுவதன்று) உணர்ச்சிக்கு ஆட் பட்டிருக்கும் நிலை சில இலட்சிய தாகங்களுக்கு இடம் கொடுப்பது உணர்ச்சியால் வரும் நெகிழ்ச்சி கவிதையின் தளம்.

இளமை, இந்தக் 'கவிதா நிலை' ஆட்கொள்ளுவ தற்கு வாய்ப்பான காலமாகும். இந்நிலையில் உணர்ச் சிக்கு வயப்படும் நிலை சர்வசாதாரணமானதாகும். தன்னை இன்னொருவராகக் கற்பித்துப் பார்ப்பதற்கு வாய்ப்பான காலம். இந்த நிலையில் உணர்ச்சியின் மொழி — இன்னும் சற்றுக் கூர்மையாகக் கூறினால் அந்த அந்த மனோநிலைகளுக்கு ஏற்ற உணர்ச்சி மொழி அவ்வயதி னரைக் கவர்வது ஆச்சரியமன்று.

வளர்ச்சி நிலையில் இந்த நிலை ஓரளவுக்குத் தவிர்க்க முடியாத ஒரு கட்டமாகும். இந்தக் கட்டத்துக்கு மேல் உணர்ச்சிகளுக்கு வயப்பட்டுப் போகாமல் அந்த உணர்ச் சிகளை, வாழ்க்கையின் அசைவியக்கத்துடன் அந்த அசை வியக்கங்களுக்குள்ளே தொக்கியும் கரந்தும் நிற்கும் உண் மைகளுடன் இணைத்துப் பார்த்து உணர்ச்சிகளின் வாயி லாக உண்மைகளைத் தெளிவுபடுத்திக் கொள்கின்ற பொழுது தான், கவிதை எழுதுபவன் உண்மையான கவி ஞனாகிறான். வாழ்நாள் முழுவதும் பல செய்யுள்களும் சில கவிதைகளும் எழுதிவிட்டு உண்மையான கவி ஞனாக முகிழ்க்காது போய்விட்ட எழுத்தாளர்கள் பலர் எம்மிடமுள்ளனர். வார்த்தைச் சௌகரியத்துக்காக அவர் களையும் கவிஞர்கள் என்று கூறுவது வழக்கமாகி விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது உண்மையே. கவிஞனாவது, ஆளுமையின் தேர்ச்சி. நம்மிடையே இன்று மிகச் சொற்பமான கவிஞர்களே உள்ளனர். கவிதைகள் எழுதுவோர் சிலர் உள்ளனர். சில வேளைகளிற் கவிதைகள் எழுதுவோர் பலர் உள்ளனர். செய்யுள்களே (Verses) எழுதுவோர் இன்னும் பலர் உள் ளனர். ஆனால் இவர்கள் எல்லோரும் தங்களைக் கவிஞர் களாகவே எண்ணிக் கொள்கின்றனர்.

ஜப்பாரின் இத்தொகுதி முதற்கட்டத் தொகுதி. கவி தையும் இளமையும் இணைந்து நிற்கும் கட்டம்; கவிதை யிலும் பார்க்க இளமைத்துடிப்பே மேலோங்கி நிற்கும் கட்டம். இந்தக் கட்டத்திலிருந்து ஜப்பார் வளர்வாரா என்பதிலும் எப்படி வளர்ந்து கொள்வார் என்பதிலும் தான் அவருக்குக் 'கவிஞர் வளர்ச்சி' உண்டா என்பது தெரியவரும்.

இளமையும் கவிதையும் இணைந்து செல்வதை அவ தானிக்கும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிட்டியுள்ளன. ஐம் பதுகளின் பிற்பகுதியிலும் அறுபதுகளின் முற்பகுதியிலும் இலங்கை வானொலியில் இளைஞர் மன்றம் எனும் நிகழ்ச் சியை நடாத்திய பொழுது அந்நிகழ்ச்சிக்குக் கிடைத்த பங்களிப்புகளின் வழியாக இந்த உண்மையை நான் வலு வாக உணர்ந்து கொண்டேன். ஆனால் ஐம்பது அறுபது களில் இளமை கவிதையுடன் இணைவதில் சில சிக்கற் பாடுகள் இருந்தன. அவற்றுள் முக்கியமானது அந்நாட் களின் கவிதை 'யாப்பு நிலைப்பட்டது' என்ற கருத்தின் மேலாண்மை முற்றிலும் தகராதிருந்தமையாகும். 'புதுக் கவிதை 'வசனகவிதை' யாகவே கருதப்பட்டுவந்த காலம். இப்பொழுதோ வசனகவிதை 'புதுக்கவிதை' யாகி விட் டது. இப்பொழுது 'மரபுக்கவிதை'தான் மோஸ்தரற் றுப் போய்க்கிடக்கின்றது.

புதுக்கவிதை 'யாப்பற்றது' என்ற ஒரு நம்பிக்கை காரணமாக இதன் பயில்வாளர் தொகை அதிகமாகியுள் ளது. (புதுக்கவிதையின் பரம்பலுக்கும் இலக்கிய ஜன நாயகத்தின் பரம்பலுக்கும் அடிப்படையான ஒரு இயை பும் உண்டு) முரண் தொடர்கள் கவிதைகளே என்ற தப்பபிப்பிராயத்தினாற் புதுக்கவிதையாகியுள்ள எழுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பல. ஆனால் உண்மையில் புதுக்கவிதை மரபுக்கவிதையிலும் பார்க்கக் கடினமானது. மரபு நிலையில் காரிகை கற்றுக் கவிபாடிவிடலாம். புதுக் கவிதைக்குக் காரிகைகளே கிடையாது: அச்சின் சிசுவான புதுக்கவிதையின் ஒத்திசைவும் ஒத்திசைவு முறிவுகளும் கவிதைப் பொருளின் இயைபு முறிவுகளுடன் பார்வை (வாசிப்பு) இயைபு முறிவுகளுடன் தொடர்பு கொண்டவை புதுக்கவிதை ஓர் உணர்ச்சி நிலையின் உச்சியில் நின்றுவரும் பேச்சு மொழியாகும். அதற்கு யாப்பொழுங்கு, எதுகை மோனை இல்லாது போனமைக்குக் காரணம் சமகால வாழ்க்கை யாப்பொழுங்கு அற்றதாக, எதுகை மோனை இயைபற்றதாக எகிறிப்பாயும் ஒலிநாடாவாக இருப்பதே ஆகும். அந்த இயைபின்மையின் சின்னம்தான் புதுக்கவிதை. இயைபின்மையின் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு புதிய உலகம் தோற்றுவிக்கப்படும் பொழுது இந்தப் புதிய கவிதை ஒரு முதிர்ச்சியையும் கனிவையும் அடையும் தமிழில் நாம் இன்னும் 'ஒத்திசைவு முறிவை'ச் சரிவர வெளிக்கொணரவில்லை. புதிய பிரக்ஞைகளும் பழையவற்றின் தகர்வுகளும் இப்பொழுதுதான் இணையத் தொடங்கியுள்ளன.

கவிதை படிப்பதற்கு மாத்திரமல்ல சிந்திப்பதற்கும் உதவ வேண்டும். கவிதை எம்மை ஆழவைக்க வேண்டும். ஆனால் அதற்குள்ளே எம்மை மூழ்கடித்து விடக்கூடாது: கவிதையின் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க அந்த ஆழம் வழிக்கிளம்பும் புதிய தரிசனம் எம்மை மேலே மேலே இட்டுச் செல்ல வேண்டும். கவிதையின் ஆழம் மனதை உயர்த்துவது, கவிதை மயக்கப் பொருள் அன்று, அது ஊக்கப் பொருள்.

ஐப்பாருடைய இந்தத் தொகுதியில் இவற்றைத் தேடுதல் கூடாது. இங்கு இளமையின் துடிப்புக் காணப்படுகிறது; சமகாலத்து நிகழ்வுகள் ஜப்பார் மனதில் ஏற்படுத்திய சலனங்களை இத்தொகுதி பதிவு செய்துள்ளது. இந்தப் பதிவுகளினூடே கவிதை நெஞ்சு ஒன்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ பெண்களின் நிலை பற்றிப் பேசும்போது

"சுகங்களையே
சுமக்க வேண்டிய நீங்கள்
சோகங்களையே சுமந்தீர்கள்
மலருக்கும் மதுவுக்கும்
உவமிக்கப்பட்டு
அஃறிணையாக்கப்பட்டீர்கள்"

"ஒடுக்குதலின் சுமையைத்
தாங்கமாட்டாமல்
உங்கள்
வார்த்தைகளனைத்துமே
நொண்டிகளாயின
அதனால் அவைகள்
வாசலுக்குக் கூட
வரவே இல்லை
அறைகளுக்குள்ளேயே
அடங்கிக் கிடந்தன" என வரும் வரிகள்

☐ தோட்டத் தொழிலாளர் பற்றிக் கூறும் பொழுது

"செங்குருதியை
வியர்வையாகச் சிந்தி
தேநீருக்கு நிறந்தந்தவர்கள்
அவர்கள்"

(இந்த வரிகள் காலஞ்சென்ற சி. வி. வேலுப்பிள்ளையின் In Ceylon's Tea Garden எனும் ஆங்கிலக் கவிதையினை நினைவுபடுத்துகின்றது) என வரும் வரிகள் போன்றவை ஒரு கவிதை நெஞ்சின் தொழிற்பாட்டைக் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ அநீதிகளைக் கண்டு துடித்து எழும் இளமைக் கிளர்ச்சிக்கு இத்தொகுதியில் பல உதாரணங்கள் உள்ளன.

உதாரணத்திற்கு:-

"நினைவுக் குறிப்புகள்"

இளமையின் இலட்சியமும் சுய இரக்கமும் கவிதையின் நெகிழ்வுடன் இணைந்துவர நெஞ்சு கனியத்தான் செய்கிறது.

☐ "தேசத்தைச் சிவக்க வைக்கும்
இந்த யாத்திரைகளில்
என் தோழர்கள்
செங்கொடிகளுடன்
இங்கும் வருவார்கள்
என் ஞாபகம் வரும்போது
அவர்களிடம் விசாரியுங்கள்

○

ஒரு நாள்
இந்தத் தேசத்திலும்
சோம்பலைச் சுட்டெரிக்கும்
ஒரு செஞ்சூரியன்
சுறுசுறுப்பாய் உதிக்கும்
இங்கே பூக்கள் மலருகின்ற
மெல்லிய ஓசைகளும்
காதுகளுக்குக் கேட்கும்

○

அப்பொழுது நான்
உயிரோடிருந்தால்
வரலாறு அங்கீகரிக்கின்ற
வசீகர முகங்களுடன்
சந்தித்துக் கொள்வோம்
அதுவரை எங்கள் கண்ணீரே
எங்களைக்
காயப்படுத்தாமல் இருக்கட்டும்
சென்று வருகிறேன்"

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பாடுகளை ஆழமான உணர்வுகள் என மயங்கும் பருவத்திலும் கிளம்பும் தேசம் பற்றிய இலட்சியத்தின் நிறக்கோலங்கள் மனதைச் சிலிர்க்க வைக்கின்றன.

இத்தொகுதிக்குள் கவிதைகள் சில உள்ளன. அவை வெகுவிரைவில் ஜப்பாரைக் கவிஞனாக்கட்டும். அந்த ஆக்கத்தினைப் பற்றி என்றாவது ஒருநாள் இன்னொரு மாணவன் எனக்கு எடுத்துரைக்க வேண்டும்.

கார்த்திகேசு சிவத்தம்பி

தமிழ்ப் பேராசிரியர்,
தலைவர் நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
09 - 09 - 1986.

அவ்வப்போது சில கவிதைகளுக்குக் களம் தந்த

சிந்தாமணி, தினகரன்,
ஈழமுரசு, விருட்சம்,
வீரகேசரி வார வெளியீடு

இவைகளுக்கும் நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிந்து கட்டிக் கொள்ளாத ஒரு வழி மறிப்பு

ஒரு தலைப்பிரசவம் நடந்தேறிய சந்தோசமும் மன நிம்மதியும். அடுத்த பிரசவத்தின் தயார் படுத்தலுக்கான ஆர்வம் மேலோங்கியிருப்பதும் தவிர்க்க இயலாததே. ரசிகனாக இருந்து ஒரு படைப்பாளியாக நான் பரிணாமம் பெற்ற போது என் சிந்தனைகளும் பரிணாமம் பெறத் தொடங்கி விட்டது. அந்த மென்மையான அவஸ்தைகளின் வெளிப்பாடுகளே இந்தக் கவிதைகள். எனக்கு ஒரு குறிக்கோள் இருக்கிறது. அதனால்தான் நான் கவிதைகள் எழுதுகிறேன். இவைகள் எட்ட வேண்டிய செவிகளுக்கு எட்டியே தீரும்; தொட வேண்டிய நெஞ்சங்களைத் தொட்டேயாகும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

பூக்களைக் கண்டு புளகாங்கிதம் அடைகிறேன். பறவைகளின் பூஞ்சிறகோசைகளைக் கேட்டுப் பூரித்துப் போகிறேன். புல் நுனிகள் சுமந்திருக்கும் பனித்துளிகளுடன் என் பாதங்கள் கலந்துரையாடுகையில் அதன் சுகானுபவத்தில் மூழ்கிப் போகிறேன். மரங்களின் பசிய செழுமைகளில் இமைகளைத் தொலைத்து விட்டு இன்பம் காண்கிறேன். நீலவானத்தின் நிச்சலமான தெளிவில் மயங்கி மனம் மகிழ்கிறேன். அதில் நீந்திச் செல்லும் பஞ்சு மேகங்களோடு சேர்ந்து பவனி போகிறேன். சிதறிக் கிடக்கும் நட்சத்திரங்களின் கண் சிமிட்டலில் முத்து மாலைக் கனவுகள் காண்கிறேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக நான் என்றைக்கும் நேசிக்கின்ற மனிதர்களுடன் சினேகமாயிருக்கிறேன். இந்த சினேகம் முழு மனித குலமும் சுபீட்சமாய் வாழ வேண்டும் என்பதை வேண்டி நிற்கிறது. இந்த வேண்டுதல் என்னைப் போராட நிர்ப்பந்திக்கிறது. அதனால் இந்தச் சமூக அமைப்பு, இந்த அமைப்பின் மேல்கட்டுமானங்கள், அவை ஏற்படுத்தியிருக்கின்ற உறவுகள் இவை அனைத்தையும் கண்டு எனக்கேற்படுகின்ற இயல்பான கோபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சமூகத்தைத் தலைகீழாக மாற்றி அமைக்கின்ற இறுக்கமான கோபம். இந்தக் கோபத்தைக் கவிதைகளாய் மொழி பெயர்க்கிறேன். கவிதை ஆயுதங்கள் முழுமையான வாழ்வுக்காகவும் அனைத்து ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களையும் பரந்துபட்ட உழைக்கின்ற மக்களையும் போராடத் தூண்டவும், போராட்டக் குணாம்சத்தை வளர்க்கவும், எதிர்கால வாழ்க்கைக்குத் தயார்படுத்தவும் உளவியல் ரீதியாக உழைக்கும் என்றே நினைக்கிறேன். இந்தச் சமூகம் மீது கடிந்து கொள்வதும் கவிதை எழுதுவதும் போராடுவதும் காலம் என்மீது சுமத்திய கடமை போலவே உணர்த்துவதும் கரங்களை உயர்த்த வைப்பதும் என் கவிதை மீது நான் சுமத்திய கடமை. அந்தக் கடமையின் கூர்மையை என் கவிதைகள் பெற்றிருக்கிறது என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

என் கவிதைகளின் ஊற்றுக் கண்ணாக அமைந்த பரந்துபட்ட மக்கள், ஐந்தாம் வகுப்பிலேயே வாசிப்பு ரசனையைத் தூண்டி ஒன்பதாம் வகுப்பில் தனது படைப்புக்களை வாசித்துக் காட்டி எழுத்தார்வத்தை ஏற்படுத்தி எழுதத் தூண்டிய என் அன்புக்குரிய ஆசிரியர் மருதூர்க் கொத்தன் அவர்கள், இக்கவிதைத் தொகுதி வெளிவருவதற்கான அடிப்படை ஒத்துழைப்பு வழங்கி உற்சாகமூட்டிய நண்பன் சண்முகராஜா, நிறைந்த அலுவல்கள் மத்தியிலும் மனமுவந்து இத்தொகுதிக்கான ஒரு முன்னுரையை வழங்கிய என் அன்புக்குரிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள், இத்தொகுதியைச் சிறப்பாக அச்சிட்ட ஸ்ரீ காந்தா அச்சகத்தார், என் விருப்புகளுக்கமைய வெளியிடுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அச்சகத் தொழிலாளத் தோழர்கள், இவர்கள் அனைவரையும் நன்றியுணர்வுடன் ஆத்மார்த்தமாய் நினைவு கூர்வதில் மிக்க ஆனந்தம் அடைகிறேன்.

என்றும் தோழமையுடன்
மு. இ. அ. ஜப்பார்

35, சென்றல் றோட்,
மருதமுனை - 02,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடம் பாடவந்தேன்

நேசிக்கவும் உழைக்கவும்
நான் நிறையவே
தெரிந்துவைத்திருக்கிறேன்
மக்களை நேசிக்கிறேன்
மக்களிடம் செல்கிறேன்
அவர்களிடம் நிறையவே
கற்றுக் கொள்கிறேன்
அதனால்தான் நான்
மானுடம் பாடவந்தேன்

○

சோம்பலையும்
சுரண்டலையும் கண்டு
எனக்கு ஏற்படுகின்ற
இதயக் கொதிப்பில்
சிவப்புக் கனவுகள்
கண்டுகொண்டிருக்கிறேன்

○

கவிதைகளின் சாடல்களை
அராஜகங்களுக் கெதிராக்கிவிட்டு
நடைமுறைகளை
அராஜகவாதிகளுக்கு
வக்காலத்துக்களாக்கும்
பம்மாத்துக்கவிஞனல்ல
அதனால்தான் நான்
மானுடம் பாடவந்தேன்

○

இந்த சமூகத்துடன்
இயல்பாகவே நான்
முரண்பட்டிருக்கிறேன்
இதன் கட்டுமானங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்த்தெறியப்பட்டு
சமூகம் தலைகீழாக
மாற்றியமைக்கப்பட வேண்டும்
○
விரோதசக்திகள்
அனைத்தையுமே
விரட்டி அடிப்பதற்காய்
ஏந்தும்
பாரிய ஆயுதங்களாக
என்கவிதைகளைப்
பக்குவப்படுத்திவருகிறேன்
அதனால்தான் நான்
மானுடம் பாடவந்தேன்
○
முரண்பாடுகளின்
மூலவேர்களான
முதலாளித்துவமும்
தன் இறுதி மூச்சுக்களை
உறுதியாக்கிக்கொள்ள
முனைகின்ற
நிலப்பிரபுத்துவமும்
வேரோடு பிடுங்கி
எறியப்படல் வேண்டும்
○
பேதங்கள் எதுவுமற்ற
ஒரு புதிய வரலாறு
இரத்தம் சிந்துவதன் மூலமே
சாத்தியமாகும்
சிந்துகின்ற இரத்தம்
நிச்சயம்
என்னுடையதாகவும்
இருக்கும்
அதனால்தான் நான்
மானுடம் பாடவந்தேன்
○○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுக் குறிப்புகள்
**1985 பெப்ரவரி, 04**

அரை வயிற்றுச் சுரண்டல்களால்
முழுவயிற்றை நிரப்பிக் கொண்ட
அரசியல் தலைவர்கள் சிலரின்
அஸ்தமனத்தின் துக்கத்திற்காக
அரைக்கம்பத்தில் பறந்திருந்த
என்தேசத்துத் தேசியக் கொடி
சுதந்திர தினத்திற்காக
முழுக்கம்பத்தில் பறக்க
முன்னுரிமை பெற்றிருந்தது

○

சுதந்திர தினமென்று
சொல்வதைப் பார்க்கிலும்
சுரண்டலுக்கான அதிகாரம்
கைமாறிய தினமென்றால்
பொருத்தமாயிருக்கும்

○

எது எப்படி இருந்த போதும்
முப்பத்தாறு வருடகால
சோகங்களைச் சுமந்தபடி
சுழல் காற்றில் அல்லாடியது
சுதந்திரக் கொடி
மனம் மட்டும் அல்லாடியது
சுதந்திரத்தை எண்ணி

○

உருப்படியான சுதந்திரத்தை
உள்ளார்த்தமாய்க் கொண்டாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் ஊராகக் கூட
இங்கு
ஊர்வலங்கள் போகின்றன
இவர்களும் இந்த ஊர்வலங்களில்......
வயிற்றுப் பசியே இவர்களுக்கு
வாடிக்கையாகிப் போனதால்
உழைப்புக்கு உரமேற்றும்
பெறுமதி மிக்கக் கைகள்
பிச்சைப் பாத்திரங்கள் சுமந்திட
இந்த
உருச்சிறுத்த மானுடங்களும்......

O

வறுமைக்குத்தான் அவர்கள்
வாழ்க்கைப் பட்டிருக்கின்றார்கள்
அதனால்தான் என்னவோ
அர்த்தராத்திரியில் கூட
விழித்திருந்து கொண்டு
வியாபாரம் நடத்துகின்றார்கள்
பசி
யாரைத்தான் விட்டது
அந்த ஓட்டைக் குடிசைகளுக்கு
அரசியல் வாதி தொடக்கம்
ஆலயக் காவலர்வரை
சமூகம் வளர்ப்பவர்களாம் இவர்கள்
சமுகமளிக்கின்றனர்

O

பசிவந்திடப் பத்தும் பறக்குமென்று
சும்மாவா சொல்லி வைத்தார்கள்
பசிக்காக மலிந்து போய்விட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னச்சின்னத் திருட்டுக்கள்
என் தேசத்து நீதிமன்றங்களுக்கு
நீதியைப் பற்றிக்கூடத் தெரியாது
இல்லாவிட்டால்
பானையையோ பாத்திரத்தையோ
பசிக்காகத் திருடியவனுக்கு
சிறைத் தண்டனையையா
சிபார்சு செய்யும்
பதுக்கலுக்கும் கடத்தலுக்கும்
சிறைத்தண்டனை
வழங்கப் போனால்
தேசத்தலைவர்கள்
என்று சொல்லிக் கொள்ள
இங்கு
யாருமே இருக்கமாட்டார்கள்

○

வீட்டுத்திட்டங்கள் கூட
என் தேசத்தில்
விமர்சையாய் நடக்கின்றனவாம்
ஆனால்
இங்கு வீதியோரப் புற்றரையை
வீடாக்கிக் கொண்டவர்கள்
எத்தனையெத்தனை பேர்

○

இன்றைய சிறுவர்கள்
இந்தநாட்டின்
நாளைய தலைவர்கள்
என்று பறை சாற்றுகின்ற
பச்சையிலேயே ஊறிப்போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைப் பொய்யர்களே
இங்கு வந்து பாருங்கள்
எச்சில் கூடைகளில்
எலும்பைத் தேடுகின்றார்கள்
நாட்டின்
நாளைய தலைவர்கள்

○

உழைப்பவனே உணவுக்காக
ரேஷன் கடைக்கியூவில் நிற்கையில்
உழைப்பில்லாத இவர்கள்
எச்சில் கூடைகளையென்ன
எருக்கூடைகளைக் கூடக்
கிண்டத்தான் செய்வார்கள்
இருந்துபாருங்கள்
உழைப்பவனின்
வியர்வையைக்கூட
உப்பாக்கிவிற்பதற்கு
உருப்படியான திட்டம் வரும்

○

பசியும் பட்டினியும்
இங்கே
கொடிகட்டிப் பறக்கிறது
இவர்களோ
சுதந்திரதினம் கொண்டாடக்
கொடிகட்டி விட்டிருக்கின்றார்கள்
பசிக்குச் சோறுபோட முடியாத
சுதந்திரமும் ஒரு சுதந்திரமா?

○

பட்டம் பெற்றவன் கூடப்
பதவியின்றிப் பரிதவிக்கின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவாயில்லை தோழர்களே
பொறுத்திருந்தால் ஒருவேளை
இன்னொரு மகாவலித்திட்டம் கூட
உருவாகலாம்

O

உங்களுக்குத் தெரியாதா
ஒருசேதி
எங்கள் தேசத்துக்குக்
கடன் கொடுத்துக் கடன் கொடுத்து
உலகவங்கி கூட
ஓட்டாண்டியாகிவிட்டது

O

தேசத்தின் கரைகளைக்
கடலலை அழிக்கிறது
தேசத்தின் தலைவிதியை
ஏகாதிபத்தியம் அழிக்கிறது
மொத்தத்தில்
தேசமே அழிக்கப்படுகிறது
தேசத்தின் தேசியமே
அன்னிய நாட்டிடம்
உருப்படுமா தேசம்

O

உருப்பட வேண்டுமெனில்
கஞ்சிக்காய் நடக்கின்ற
களவுகள் அனைத்தும்
களையப்படுவதுடன்
வயிற்றை நிரப்புவதற்காய்க்
கருப்பையை நிரப்பிக் கொள்ளும்
ஓலைக்குடிசைகளின்
ஓரங்க நாடகங்களும்
ஒழிக்கப்படல் வேண்டும்

O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையோரத்துப்
பாவாத்மாக்களின்
பசிநெருப்புத்தணிக்கப்படுவதுடன்
குழி விழுந்த கண்களின்
நெடிதான பயணங்களும்
குழிதோண்டிப்
புதைக்கப்பட வேண்டும்
○
ஒடுக்கப்படும் வர்க்கத்தின்
குரல்வளை நெர்ப்புக்கள்
தடுக்கப் படுவதுடன்
உழைக்கின்ற கரங்களுக்கு
அரசியல் சாசனங்கள்
உயிலெழுதப்பட வேண்டும்
○
சோம்பலும்
சுரண்டலும்
தேசத்தைவிட்டே
விவாகரத்து
செய்து கொள்ள வேண்டும்
மொத்தத்தில்
தேசமே இங்கு
தேசியமயமாக்கப்படல் வேண்டும்
அதுவரை தேசம்
அல்லாடிக் கொண்டேயிருக்கும்
கம்பங்களின்
உச்சிகளில் நின்று
சுழல்காற்றில் அல்லாடும்
இந்த சுதந்திரக் கொடிகளாய்
○○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு சம்மதத்துக்காக

உன் முகத்திரையைநீ
கிழித்துக் கொள்ளுமுன்னரேயே
என் மனத்திரையை நான்
கிழித்துக் கொண்டது
நியாயமில்லைத்தான்
என்செய்வேன் நான்
மனிதனாய்ப் பிறந்த
எவருக்கும் ஏற்படுகின்ற
இயல்பான உணர்வுதானேகாதல்
எனக்கு உன்மீது ஏற்பட்டதில்
என்ன புதுமை இருக்கிறது

○

அழகிலும் அமைதியிலும்
ஆசை கொள்ளாதவர்கள்
அவனியில் யார்தான் உளர்
அதில் நான்மட்டுமென்ன
அன்னியமாகிப் போனவனா?

○

நீகூட யோசித்துப்பார்
முல்லையென்றபடியால்தான்
பாரி தேரைய கொடுத்தான்
முள்ளாய் இருந்திருந்தால்
அந்தக்காட்டையே கொழுத்தியிருப்பான்
தேரைப் பாரி கொடுக்கையில்
இதயத்தை நான் தந்துவிட்டதில்
என்ன தவறு இருக்கிறது

○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துவிட்டுக் கேட்பதற்கு
இது ஒன்றும் கடனுமில்லை
கண்டவர்களுக் கெல்லாம்
இடம் கொடுப்பதற்கு
இதுஒன்றும் சத்திரமுமில்லை
இது இதயம்

○

எது எப்படியிருந்தபோதும்
நீமட்டும் பேசாமலேயே இருப்பதா?
நீமௌனமாயிருக்கிறாயா
அல்லது ஊமையாய் இருக்கிறாயா
என்பதைக் கூட என்னால்
எடை போட முடியவில்லை
போகட்டும்
மௌனந்தான்
சம்மதற்துற்கு அர்த்தமென்றால்
அதுகூட ஒரு
முட்டாள்தனமான முடிவாயிற்றே
அப்படியாயின் உன்பதில்!

○

என் இதயத்தின் இமைகள்
கத்தரிக்கப்பட்டுவிட்டதால்
தாலாட்டைக் கேட்டும் அதனால்
தூங்கமுடியாமல் இருக்கிறது
கண்கள் கூடப்
பார்ப்பதற்காகத்தான்
இருக்கிறதாம்
ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பதெல்லாம் என்னவோ
கனவாகத்தான் இருக்கிறது
○

ஒற்றைக்கரத்தை வைத்துக்கொண்டு
ஓசை எழுப்ப முடியாமல் தவிக்கும்
இந்த இதயத்துக்காகக் கொஞ்சம்
இரக்கம் காட்டு
வார்த்தைகளால் உன்னை
வணங்கிக் கொண்டிருக்கும்நான்
உன்சம்மதத்தோடு
அடுத்ததரிசனத்துக்காய்த்
தவித்துக் கொண்டிருக்கிறேன்.
○○

## மழை

உன் ஒளிச்சிரிப்பை
பூமாதேவி பார்க்கமுடியாது
மறைத்ததனாலா
நீமேகத்தை
எட்டி உதைத்தாய்
ஹேய் சூரியனே!
பார்த்தாயா
அது அழுகிறது
மழையாய்
○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பைச்சுமப்பவர்கள்

பூமாலைகளுக்கு ஆசைப்பட்டு
நாராகிப் போனீர்கள்
மார்கழி மாதத்து
மழைக்கால இரவுகளிலே
பௌர்ணமியைத் தேடிப்
பரிதவித்தீர்கள்
ஒடுக்குதல்களை உடைத்து
மேன்மை பெற நினைத்து
மென்மைகளைப்
பறிகொடுத்தீர்கள்
ஒவ்வொரு விடியலுக்கும்
செங்கோலமிடத்
தூரிகையாகத்துடித்துத்
துரும்பாகிப் போனீர்கள்
சுகங்களையே
சுமக்க வேண்டிய நீங்கள்
சோகங்களையே சுமந்தீர்கள்
மலருக்கும் மதுவுக்கும்
உவமிக்கப் பட்டு
அஃறிணையாக்கப்பட்டீர்கள்
நேர்மைகளை
நேசிக்கத் தெரிந்த
நெஞ்சங்களில் என்றைக்கும்
நெருப்பையே சுமந்தீர்கள்
இனியும் பொறுப்பதா?
அனைத்து விலங்குகளிலிருந்தும்
அன்னியப்பட்டுக் கொள்ளத்
தோழிகளே எழுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சுகங்களுக்கும்
சோகங்களுக்கும்
முற்றுப்புள்ளிவைத்தவைகளில்
தூக்கமாத்திரைகளும்
தூக்குக் கயிறுகளும்
பங்குகொண்டன என்றால்
வாருங்கள்
தூக்கமாத்திகைளைப்
புதைப்போம்
தூக்குக்கயிறுகளை அறுப்போம்
தூரத்துச் செஞ்சூரியனைத்
தூபம்காட்டி அழைப்போம்.
○○

## கவனமாயிருப்போம்

எங்கள் புத்தகங்களைப்
பறித்தெடுப்பார்கள்
படிப்பு சோறு போடாது
என்பார்கள்
உழைப்புக்குக்
கூலிதரமாட்டார்கள்
மூன்று வேளைச்சாப்பாடு
போடுகிறோம் என்பார்கள்
இனி
கண்களையும் குருடாக்கிவிட்டுச்
சொல்வார்கள்
இது உங்கள் விதியென்று
○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் வாழ்க்கை

பிம்பமாய் விழுகின்ற
நிழல்களையே ஆக்கிரமிக்கும்
இருட் போர்வையிலும் கூட
அவர்கள் பயணத்தின்
தொடக்கமும் திரும்பலும்

○

சரீரத்தைத் தொட்டு
ஆலிங்கனம் செய்து
ஊடுருவிச் செல்லும்
சில்லென்ற பனிக்காற்று
அவர்கள் உணர்வுகளுக்கு
விறைப்பூட்டும்

○

சப்பாத்துக் கால்களின் கீழ்
மண்டியிட்டபடி
'ஜல்ஜல்' சதங்கையொலியைக்
கிளப்பிடும் சருகுகள்
அவர்கள் 'ஸ்மார்ட்' நடைக்கு
சுதி கூட்டும்

○

பாதையைப் பாதையாய்க்
காட்டி நிற்கின்ற
தெருவிளக்குக் கம்பங்களின்
நிமிர்வு அவர்களுக்குப்
புதியதொரு நிமிர்வையே
ஏற்படுத்தும்

○

தெருவிளக்குகள்
அவர்களை ஒருபோதும்
எதிரிகளுக்கு
அடையாளம் காண்பித்தது
கிடையாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்றால்
அவர்கள் தெருவிளக்குகளுக்கும்
தாயகப் பற்று அதிகம் போலும்
O
கடந்து வரும்
கள்ளிச் செடிகளின் அசைவுகளால்
அச்சம் அவர்களைக்
கவ்விக் கொள்ளும்போது
இதயம் வெட்கித்
தலை குனியும்
மரத்திருக்கும் இதழ்கள்
ஏளனமாய்ப் புன்னகைக்க
அச்சம் தானே விலகும்
O
மணற் புதர்களிலிருந்து
ஊளையிட்டபடி
பாதையை நோக்கி
நாய்களெல்லாம் ஓடிவருவது
அவர்களை விழித்துக் கொள்
என எச்சரிக்கும்
O
தொங்கிக் கிடக்கும்
துப்பாக்கிகள் தலைநிமிரும்
எதிரிகள் பதுங்கிவர
அவர்கள் விழிகள் சந்திக்கும்
தலை நிமிர்ந்த துப்பாக்கிகள்
ஒருமித்து வெடிக்கும்
நிஸப்தத் திரைகிழிய
ஆங்கே......
எதிரிகள் பிணங்கள்
மணற்றரையை முத்தமிடும்
இப்படியாய்
இவர்கள் வாழக்கை
தாயகம் பாலஸ்தீனத்துக்காய்
OO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமையான அவளுக்கு

என் முகத்தைப்
பார்த்துக் கொண்டே
உங்களைத்தான் காதலிக்கிறேன்
என்றுநீ சொன்னபோது
எனக்குள்ளே வெட்டிமறைந்த
அந்தக்கண மின்னலின் கீற்றில்
உன்னை நான் அளந்துகொண்டேன்
அடடா!
நீ எவ்வளவு துணிச்சல்காரி
○

நீ என்னைக்
காதலிக்கத் தொடங்கியதிலிருந்து
என்பேனாவும் உன்னைக்
காதலிக்கத் தொடங்கிவிட்டது
குருதியின்மீது சிகப்பு நிறத்துக்கு
எந்தளவு ஐக்கியமோ
அந்தளவு ஐக்கியம்
உன்மீது
எனக்கும் என் பேனாவுக்கும்
○

காதலைப்பற்றி அனுபவிக்காது
பாடிப் பாடிக்
குவிப்பவைகளெல்லாம்
வெறும் கற்பனைக் காடுகள்
என்பதனால்தான்
நானதை
அனுபவித்துக் கொண்டே
பாடத் தொடங்கியிருக்கிறேன்
○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்தில் ..........
கவியரங்குகளிலும்
வகுப்பறைகளிலும்
நான் காதலைப்பற்றிப்
பாடும் போதெல்லாம்
ஆங்காங்கே
சரமாரியாய் ஒலிக்கின்ற
கைதட்டல்களுக்கு மத்தியிலே
நான் காணாமல் போயிருக்கிறேன்
○
ஆனால்
நான் இனிப்பாடுகின்ற
காதல் கவிதைகளுக் கெல்லாம்
நீ மட்டும்தான் ரசிகை
உன்கைதட்டல்களொன்றும்
எனக்கு வேண்டாம்
ஏனென்றால்
என் நினைவுகளைச்
சுமந்திருக்கும்
உன் இதயத்தின்
'லப்டப்' ஒலிகளே போதுமானது
○
இப்பொழுதெல்லாம்
உனக்குக்
கடிதம் அனுப்பிவிட்டு
நின் பதிலுக்காக வேண்டிக்
கடிதக் காரனைக் கூடக்
காதலிக்க வேண்டியிருக்கிறது
○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் கூட்டத்தைக்
காணும் போதெல்லாம்
என் கண்கள்
உன்னைமட்டுமே
துழாவித் துழாவித் தேடுகின்ற
அந்தக் கணங்களிலெல்லாம்
சுற்றியுள்ள சூழலுக்குள்
என்னை நானே
தொலைத்து விட்டுத்
தேடிக் கொண்டிருக்கிறேன்
இப்போதைக்கு நானனுபவிக்கின்ற
தற்காலிகத் தனிமைக்காக
தவழ்ந்து வருகின்ற
தென்றலைக் கூடக்
கோபித்துக் கொள்கின்றேன்
இந்தக்கண நேரத்திற்குள்ளே
எங்காவது
நம்சந்திப்பு நிகழாதா
என்றுதான் என் இதயம்
அடித்துக் கொள்கிறது
○
இந்த உயிரான மடலை
உன்மலர்மடி மஞ்சத்தில்
கிடத்திக்கொள்
ஏனென்றால்
அந்த நித்திரையிலாவது
இந்தத் தனிமைக்கு
நிம்மதி கிட்டட்டும்.
○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் நேசிக்கும் நண்பர்கள்

செங்குருதியை
வியர்வையாய்ச் சிந்தி
தேனீருக்கு நிறந்தந்தவர்கள்
அவர்கள்
○
இதயங்களின் நிறத்தினை
இறப்பர் மரங்களின்
பாலுக்குக் கொடுத்தவர்கள்
அவர்கள்
○
உயரே இருக்க வேண்டியவர்கள்
அதனால்தான்
உயரத்தில் இருக்கின்றார்கள்
அவர்கள்
○
உண்மை உழைப்பினில்
உரமேறியிருக்கும் கரங்களால்
உலகையே அழிக்க வல்லவர்கள்
அவர்கள்
○
இலயங்களில் எரிகின்ற
குப்பி விளக்குகளில்
கோட்டை சமைக்கக்
கற்றுக்கொண்டவர்கள்
அவர்கள்
○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவன் விழிக்கு முன்னம்
கடமையுணர்வினால்
கண் விழித்துக் கொள்பவர்கள்
அவர்கள்

○

ராத்திரியின் விடியல்களில்
தூக்கத்தை நீளவைக்கும்
சோம்பலின் எதிரிகள்
அவர்கள்

○

விடிந்த பின்னும் விலகாத
உறைபனியில் களத்துக்கு
உழைப்புக்காய் நடப்பவர்கள்
அவர்கள்

○

கொட்டும் மழையினிலே
வாழ்க்கைக்காய் நனைந்து
காலத்தோடு போராடுபவர்கள்
அவர்கள்

○

நாட்டின் நாயகர்கள்
நான் நேசிக்கும் நண்பர்கள்
தோட்டத் தொழிலாளர்கள்
அவர்கள்

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறக்கப்படாத தீப்பெட்டிகள்

விலங்குகள் போடப்பட்டன
தினுசு தினுசாக......
தவறுகள் நேர்ந்த போதெல்லாம்
உங்கள் கரங்கள்
தட்டிக் கேட்பதற்குத்
தவமிருந்தன
துணிந்த கரங்கள்
உயர்வதற்குப் பதிலாய்ப்
பணிந்தே போயின
அல்லது பணிக்கப்பட்டன

O

அனர்த்தங்களுக் கெதிராய்
உங்கள் நாக்கள்
குரலெழுப்ப உந்தின
அவையனைத்துமே
இருளுக்குள் முளைத்த
இருளாயின

O

அடுக்களை அடுப்பில்
நெருப்போடு நெருப்பாய்
நெருங்கியே இருந்தீர்கள்
வேதனைத்தணல் கனன்றபோது
கோப ஜுவாலையாய்
மாறியதெனினும்
அது உங்கள்
இதயங்களையவித்ததேயன்றி
வேறெவற்றையும் அழிக்கவில்லை
உலைகளை எரிக்கும்
அடுக்களை நெருப்பாய்

O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9470)

சூழலில் நடமாட
உங்களுக்கு
சுதந்திரமெதுவுமில்லை
அவைகள் அனைத்துமே
பண்பாடு என்ற
பழம்பெரும் விலங்கால்
இறுக்கப்பட்டு நசுக்கப்பட்டன
இதுவே எங்கள்
கலாச்சாரமெனச் சொல்லிக்
காதிலே பூவைத்தார்கள்
வைத்த பூக்களோ
இன்னும் வாடவேயில்லை

○

ஒடுக்குதலின் சுமையைத்
தாங்க மாட்டாமல்
உங்கள்
வார்த்தைகளனைத்துமே
நொண்டிகளாயின
அதனால் அவைகள்
வாசலுக்குக் கூட
வரவேயில்லை
அறைகளுக்குள்ளேயே
அடங்கிக் கிடந்தன

○

உங்கள் பார்வைகளனைத்தும்
ஒட்டுமொத்தமாய்
உலகை நோக்கவில்லை
அவையனைத்துமே
பலகணியின் இடுக்கினூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9470) N

தட்டி வேலிகளின் ஓட்டைகளினூடுமே
விரவிச் சென்றன

○

ஆவதும் பெண்ணால்
அழிவதும் பெண்ணால் என்பது
இங்கு
வெறும் கற்பனையாகிவிட்டது
ஏனென்றால்
இதுவரை உங்களால்
ஆனதும் எதுவுமில்லை
அழிந்ததும் ஒன்றுமில்லை
மாறாய்
நீங்கள்தான் அழிந்தீர்கள்
விரக வெறிபிடித்த
ஓநாய்கள் தீண்டுவதால்
வெளியில்வர அஞ்சினீர்கள்
ஓநாய்கள் ஒழியும்வரை
வெளியிலே வருவதில்லை
என்று ஒரு முடிவை
இப்போதைக்கெடுக்காதீர்கள்
ஏனென்றால்
ஓநாய்கள் தானாக
ஒருபோதும் அழியாது
ஒழித்துக் கட்டுதற்கு
ஒன்றாய்த் திரளுங்கள்

○

வறுமையை விரட்டுதற்கு
வேலை செய்ய முன்வந்தீர்கள்
அங்கேயும் ஆண் பெண் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமை நிலை அரசோச்சியது
நீங்கள் செய்யும் வேலையைத்தான்
ஆண்களும் செய்தார்கள்
ஆனால்
சம்பள நாளன்றோ
அவர்களுக்கு ஐநூறு
உங்களுக்கு இருநூறு
ஏனென்ற கேள்விக் கங்கு
இடமே இருப்பதில்லை

○

கற்பு நெறி பேசினார்கள்
அவர்களோ
வற்புறுத்திப் பெண்ணைக்
கட்டிக் கொடுத்தார்கள்
வீட்டுக்குள் பூட்டிவைக்கும்
விந்தைகள் செய்தார்கள்
விரும்புகின்ற ஒருவனைக் கைப்பிடிக்க
ஏன் உங்களுக்கு உரிமையில்லை
அனைத்து விலங்கினையும்
அறுத்தெறிய அணி திரள்வீர்

○

பட்டங்கள் பெற்றிடுங்கள்
சட்டங்கள் ஆக்கிடுங்கள்
சாதம் படைக்கின்ற உங்களால்
நிச்சயம்
வேதம் படைக்கவும் முடியும்
நாணத்தால் சிவக்கின்ற
கன்னங்கள் இனிமேல்
அடிமைத்தனம் கொழுத்தக்
கோபத்தால் சிவக்க வேண்டும்

○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி மும்தாஜ் ஜெயந்திலா
என்று நீங்கள்
மனதுக்குள் நினைத்தது
மாறட்டும் இன்று
சாதிகளும் மதங்களுமில்லாச்
சமூகத்தைச் சமைப்பதற்குச்
சபதத்தையெடுத்துக் கொள்ளுங்கள்

O

பூங்கொடிகள் என
உவமை சொல்லிப்
புகழுகின்றார்கள் உங்களை
நீங்களும் அவற்றில்
பூரித்துப் போகின்றீர்கள்
விழித்துக் கொள்ளுங்கள்
நீங்கள் பூங்கொடிகளல்ல
புதுயுகம் படைக்கப்
புறப்படப் போகும்
சமுதாயப் படையின்
முன்னணி வரிசையில்
அசைந்து பறக்கப் போகும்
செங்கொடிகள்

O

கால்களைச் சற்றே தூக்குங்கள்
மெட்டிகளும் கொலுசுகளும்
அணிந்து கொள்வதற்கல்ல
அடிமைத்தனத்தை
அழுத்தி மிதிக்கவும்
அடக்கு முறைகளை
உடைத்து நொருக்கவும்

O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கமான உங்களை
அடக்க நினைப்பவர்கள்
ஒன்றை மட்டும்
மறந்து விட்டார்கள்
நீங்களெல்லாம்
திறக்கப்படாத தீப்பெட்டிகளென்று
திறந்து கொள்ளும் வரை
அமைதி நிலவும்
திறந்து கொண்டால்
பிரளயமே வெடிக்கும்
திறந்து கொள்ளுங்கள்
தீயில் கருகட்டும் அடிமைத்துவம்
○
ஒன்றை மட்டும்
ஞாபகத்தில் கொள்க
உரிமைகளுக்காகப்
பிச்சைப் பாத்திரமேந்தியகாலம்
இமயமலை ஏறிவிட்டது
யாசகமாய்ப் பெறுவதல்ல
உரிமைகளென்பது
போராடிப் பெறுவதற்காய்ப்
புறப்பட்டெழுங்கள்
○
நாளைய சூரியன்
விடிவுக்காய் எழுகையில்
உலகமே சிவந்து
குலுங்க வேண்டும்
உங்கள் வெற்றிக் கொடிகள்
உயரே பறக்க
முகங்கள் புன்னகையால்
பூரித்திருக்க வேண்டும்
○○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் காலத்து ஆனந்தங்கள்

ரியூசன் நேரத்தைச்
சாட்டுச் சொல்லி
சில்லறையாய் வாங்கிச்
சேர்த்துவைத்த பணத்தில்
களவாய்
பகல்காட்சி சினிமாபார்த்து
○
ஊருக்கு மேற்கேயுள்ள
அறுவடைக்குப் பிந்திய
தரிசு வயல் நிலங்களில்
அடைக்கலங் குருவி
தொண்டுவைத்துப்பிடித்து
○
நோன்புகாலத்தில்
பள்ளிவாசல் முன்றல்களில்
பேரீச்சங் கொட்டைகள்
பொறுக்கி
○
முடிந்து போன
லக்ஸ்பிறே ரின்னின்
மூடியொன்று சக்கரமாக
தடிபிடித்து வீதியெல்லாம்
உருட்டி உலாவந்து
○
களவாய்ச் சென்று
கடலில் குளித்துவிட்டு
வீட்டுக்குத் திரும்பியதும்
தலையிலே கைவைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா நடாத்துகின்ற
பரிசோதனையில்
அக்கா வெற்றிபெற்று
அம்மா என்னைத்திட்டி

○

கால்பந்து விளையாடி
என்பக்கம் வெற்றிபெற்று
விளையாட்டு சண்டையில் முடிந்து
அடிபட்டவர்களில் ஒருவன்
தன் அப்பாசகிதம்
என் வீட்டுக்கு வந்து
அம்மாவும் அக்காவும்
அப்புறமென்ன
என் முதுகு பழுத்து

○

என் ஓட்டைக் காற்சட்டைக்குள்
விரல்களை ஓட்டிக்
கேலி செய்கின்ற
நண்பர்களின்
தொல்லைகள் சகித்து

○

பாடசாலைக்குப் பின்னேயுள்ள
தென்னந்தோப்பில்
களவாய் இளநீர் பிடுங்கி
இருட்டிலே சுவைத்து
காலையில் நாங்களே
நிரபராதிகளாய்
கோம்பைகள் சுமந்து

○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் எதுவுமின்றித்
தண்டித்து விட்ட
வாத்தியார் வீட்டு
முற்றத்து மின்விளக்கு
கண் மூடிடும்
என்கல்லெறி பட்டுடைந்து

O

இனி இந்த வாழ்க்கையை
என் பிள்ளைகள்தான் அனுபவிக்கும்

OO

### கோபத்துடன்

முட்டிய பின்னர்தான்
தெரிகிறது
முன்னால் இருப்பது
சுவரென்பது
ஹேய் சுவரே
நான் நெடுந்தூரம்
போக வேண்டும்
வழிவிடு! வழிவிடு!!

O

மூழ்கியெழுந்த பின்னர்தான்
தெரிகிறது
மூழ்கியது
சாக்கடையில்தான் என்பது
ஹேய் சாக்கடையே
தொலைந்து போ
புதிய ஊற்றின்
பிரவாகமே
ஊற்றெடு! ஊற்றெடு!!

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அமாவாசை இரவு

கருமை படர்ந்த
வான்வெளியெங்கும்
கண்சிமிட்டும்
நட்சத்திரங்கள்
பசிய மரப்பரப்புகளையும்
கடந்து
படுத்துக் கிடந்தது மௌனம்
மல்லாந்து

○

ஆட்காட்டிக் குருவியொன்று
அரற்றிப்பின் அடங்கி
எங்கோ நோக்கி
சடசடத்துப் பறக்கும்

○

நிழல்களைப் போர்த்துக்
கருமை படர்ந்த
பனைமர உச்சிகளைக்
காற்றுமெல்லத்
தடவிச் செல்லும்

○

அண்டை வீட்டுத்
திண்ணை வெளியில்
நாயொன்று
ஏதோ அரவம் கேட்டு
உரத்து உரத்துக் குரைக்கும்

○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கிப் போனவர்களின்
குறட்டை ஒலிகள்
விழித்துக் கிடக்கும்
எந்தன் காதுகளுக்குத்
துல்லியமாய்க்
கேட்கும்
○
இரவுத் தேவைகள்
ஏதோ ஒன்றுக்கு
சுற்றத்து வீடொன்றின்
கிணற்றுத்துலா
முனகி ஓயும்
○
எங்கள் வீட்டுத்
தண்ணீர்த் தொட்டியின்
அருகில் நின்றபடி
வளர்ப்பு ஆடு
தாகம் தீர்ப்பது
விழிப்புக்கு சந்தம் தரும்
○
தொலைவில்......
சொந்தங்களின்
சுகங்களைப் பற்றி
நினைவுகள் தொலையும்
○
பசியமரப்
பரப்புகளையும் கடந்து
படுத்துக் கிடக்கும் மௌனம்
மல்லாந்து
○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்து வருகின்ற
ஹெலியொன்றின் இரைச்சல்
காதுகளில் மோதி
செவிப்பறையைக் குடையும்
○
சொந்தங்களின்
சுகங்களைப் பற்றித்
தொலைந்த நினைவுகள்
மீண்டுவரும்
○
தொடர்கின்ற
வேட்டொலிகள்
ஆன்மாவைக் கூட
அதிரவைக்கும்
சிதறிய தீப்பொறிகள்
காற்றிலே மிதக்கும்
○
ஹெலி இரைந்தபடி
திரும்பிச் செல்லும்
○
அரவங்கள் ஓயமுன்னம்
தூக்கத்தை மறந்து
கண்கள் உறுத்தும்
பிடரிமயிர் சிலிர்க்க
உடலை ஒருமுறை
உலுக்கிக் கொள்வேன்
○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனத்த சுமையுடன்
என் இதயம்
சப்தித்துக் கொள்ளும்
''பாவம் இங்கே
என்மக்கள்
இதயத்தை என்றைக்கும்
நெருடிக் கொண்டிருக்கும்
ஜீவன்கள்''
O
உணர்வுகள்
இன்னொரு நிகழ்வை
எதிர்பார்த்தபடி
OO

## இருளுக்குப் பின்னே

மேற்கு வானம்
சிவந்து குலுங்கும்
இன்றைய விடியலுக்கு
விழ இருக்கின்ற
முற்றுப் புள்ளியாக
சூரியன்
புதைந்து... புதைந்து...
O
மனம் கணக்குப் போடும்
இந்த
இருளுக்குப் பின்னால்
ஒரு சூரியன்
இருந்து கொண்டு தானே
இருக்கிறது
OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதத்துவம் தோற்கடிக்கும்

இரக்கத்தை நிராகரித்த
அந்தச்செய்தி
எனக்கும் கிடைத்தது
மிகத்தாமதமாகித்தான்
எல்லோருக்கும்
கிடைத்தது போலவே
○
முதலில்
நம்புவதற்குக் கொஞ்சம்
கடினமாய்த்தான் இருந்தது
இருப்பினும் தெரியும்
இவர்கள்
செய்யக்கூடியவர்கள் என்பது
○
தோழர்களே!
உங்கள் மூச்சுக்கள்
முரண்பாட்டு முகடுகளைத்
தடவிச்செல்லாது
முட்டி மோதிவிட்டுத்தான்
போகும் என்பதை
உணர்ந்திருந்தார்கள் போலும்
அதனால்தான்
உங்கள் மூச்சுக்களுக்கே
உலை வைக்க முடிவெடுத்தனர்
○
நினைக்கையில்
சிரிப்புத்தான் வருகிறது
உங்கள் கொலைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடந்தையாய் இருந்தவர்களும்
அதனை நியாயப்படுத்தியவர்களும்
இப்போதும்
இங்கே
அரைகுறை மாக்ஸிஸம் பேசியபடி

O

மனிதத்துவம் ஒருநாள்
அவர்களைத் தோற்கடிக்கும்
அப்போது
அந்தக் கொலைகாரர்களின்
வரட்டுத் தத்துவங்களும்
சந்தர்ப்பவாத நடைமுறைகளும்
வரலாறு படைக்கின்ற
குப்பைத் தொட்டிகளில்
நிச்சயம் ஈவிரக்கமின்றித்
தூக்கியெறியப்படும்

O

அதற்கிடையில்
அவர்கள் முகங்களை அலங்கரிக்கின்ற
முகமூடிகளைக் கிழித்துவிட்டு
மக்களிடம் வந்து
மன்னிப்புக் கேட்பார்களாயின்
அவர்கள் களங்கம் கழுவப்பட்டு
கரங்கள் புனிதப்படலாம்
அதற்கு உங்களைப் போன்றவர்களின்
புதைகுழிகளே பாடமாய் அமையலாம்

O

ஞாபகப்படுத்துகிறேன்
அடக்குமுறையாளர்களின்
துப்பாக்கிகளால் மட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடமிருந்து
அன்னியமாகிப்போன
அராஜகவாதிகளின்
துப்பாக்கிகளால் கூட
எதுவுமே செய்யமுடியாது
அர்த்தமற்ற
கொலைகளைத்தவிர

(அராஜக வாதிகளால் படுகொலை செய்யப்பட்ட அகிலன், செல்வன் நினைவாக)

○○

## நிகழ்வுகள்

காலத் தூரிகையின்
கோலங்களால்
வாழ்க்கைக் கடதாசியில்
சோதனைக் கசங்கல்கள்

○

வறுமைத் தீயின்
கோரத் தாக்குதலால்
வயிற்று உடலில்
பசிக் கொப்புளங்களின்
பயங்கர வேதனை

○

எண்ண மேகத்தின்
துக்க முழக்கத்தால்
கண்ணீர் வெள்ளிகளின்
கடும் சிதறல்கள்

○

யாவும்
உலக வீட்டில் நிகழும்
நிலையில்லாத
நிகழ்வுகள்

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் மாடியில் நின்றபடி

சிறுத்துத் தெரிகின்ற
அடர்ந்த மரங்களுக்குப் பின்னால்
மறைந்து போய்விட்ட
மாயையை ஏற்படுத்துகின்ற
நீலநிறவானம்
அதற்கப்பால் என் விழிப்புலன்
சம்மதிக்க மறுக்கும்

O

சற்றுத் தொலைவில்
வெள்ளை வெளேரென்று
வெய்யிலில் மின்னுகின்ற
மெடிக்கல் பெகல்டிக் கட்டிடங்கள்
மழலைகளை
மனதில் கொண்டுவந்து நிறுத்தும்

O

புதிதாய்ப் போடப்பட்ட
மைதானத்துச் செம்மண்
தோட்டங்களில் உழல்கின்ற
புனிதமான பாதங்களை
நினைவுகளில் புகுத்தும்

O

சடலங்களை எரித்தபடி
புகையைக் கக்குகின்ற
முன்னால் தெரிகின்ற சுடலை
மரணமொன்றிருக்கிறது
என்கின்ற உண்மையை
எங்களுக்கு உணர்த்தும்

O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலின் தடவலுக்கு
சலசலப்பு ராகம் பாடும்
நெடிதுயர்ந்த பனைமரங்கள்
அசோக்குமாரினதும்
பாலுமகேந்திராவினதும்
வீட்டுக் கதவுகளைத்
தட்டப் போகின்றோம்
எனத் துடித்துக் கொண்டிருக்கும்

○

புகையிரதங்களின்
தரிசனங்களை இழந்து
தவித்துப் போய்க் கிடக்கும்
தண்டவாளம்
எந்த நேரத்திலும்
புகையிரதம் வரலாம்
என்கின்ற எதிர்பார்க்கையில்
இருக்கும்

○

காலையும் மாலையும்
சனக் கூட்டத்தோடு
ஐக்கியமாகியிருந்து
இப்போது
அவர்களிடமிருந்து
அந்நியமாகிப் போன
கொக்குவில் ஸ்டேசன்
தனித்துக் கிடக்கும்

○

பாலசிங்கம் விடுதியின்
மூன்றாம் மாடியில் நின்று
இவைகளை ரசிப்பதில்
எனக்கு நல்ல விருப்பம்

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனுக்கு

பிரியமுள்ள அஜித்
உன்கடிதம் கிடைத்தது

○

இப்பொழுது நிலைமைகள்
எப்படியென்று கேட்டு
எழுதியிருந்தாய்
மோசமாய்த்தானிருக்கிறது
ஷெல் சத்தங்கள் கேட்டு
அடுத்துவரும் நிமிடங்களில்
அவலச்சத்தங்கள் தான்
கேட்கின்றன
அப்புறமென்ன
அம்புலன்ஸ்
ஆஸ்பத்திரி
சவப்பெட்டிக்கடை
வழமையான நிலைமைதான்
அப்பாவிமக்கள்தான் பாவம்!

○

கொஞ்சநாட்களுக்கு முன்னால்
தாலிகட்டி
இரண்டே இரண்டு
மணித்தியாலங்களில்
ஒருமணப்பெண்ணிடமிருந்து
மாப்பிள்ளை ஒருவன்
பறித்தெடுக்கப்பட்டான்
அவள் கதறிக்கதறி அழுதது
இன்னும் என் இதயத்தைப்
பிழிந்தெடுக்கும் நிகழ்வு

○

எல்லைப் புறங்களில் இருந்து
இடம்பெயர்ந்து வந்தவர்களின்
எண்ணிக்கையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டெழுதியிருந்தாய்
என்னால் நம்பமுடியவில்லை
அங்கங்கள் வெட்டப்பட்ட
அனைத்துச் சடலங்களினதும்
எண்ணிக்கையைப் பார்த்துவிட்டு
ஏங்கியே போய்விட்டேன்

O

ஹபரணை வவுனியா
அநுராதபுரம் சிறிமாபுரம்
அனர்த்தங்கள் யாவையும்
விளக்கமாகவே
விளம்பியிருந்தாய்

O

அங்கிருந்து
இங்கு வந்தவர்களையும்
இங்கிருந்து அங்கு வந்தவர்களையும்
துப்பாக்கிகளை மட்டுமே
சுமந்து திரிகின்ற
வெறிபிடித்த மிருகங்கள்
என்பதைவிட
அவர்களை அழைப்பதற்கு
வேறொரு சொல்லுமில்லை
என் அகராதியில்

O

அப்பாவி மக்கள்
எத்திசையில் இறப்பினும்
அவர்கள் அனைவருமே
எம்மக்கள்தான்
அப்புறமென்ன
அடிக்கடி கடிதம் எழுது
அடுத்தமடலில் சந்திப்போம்

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்று வருகிறேன்

வாசித்து வாசித்து
மனப்பாடம் செய்து ஒப்புவித்து
பட்டம் வாங்கிச் செல்கின்ற
இந்தப் படிப்பு
முற்றுப் பெற்றாகி விட்டது
பிஞ்சு நேசங்களை விட்டுப்
பிரிந்து போவதற்குப்
பிரியமில்லாமற்தானிருக்கிறது

○

நண்பர்களே!
இருப்பினும் மன்னியுங்கள்
நான் போகத்தான் வேண்டும்
என் கடமைகளை எதிர்பார்த்துத்
தேசம்
காத்துக் கிடக்கிறது என்பதற்காகத்
தோழர்களுடன் சேர்ந்து
ஒரு யாத்திரை போகிறேன்

○

தேசத்தைச் சிவக்க வைக்கும்
இந்த யாத்திரைகளில்
என் தோழர்கள்
செங்கொடிகளுடன்
இங்கும் வருவார்கள்
என் ஞாபகம் வரும்போது
அவர்களிடம் விசாரியுங்கள்

○

ஒருநாள்
இந்தத் தேசத்திலும்
சோம்பலைச் சுட்டெரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செஞ்சூரியன்
சுறுசுறுப்பாய் உதிக்கும்
இங்கே பூக்கள் மலருகின்ற
மெல்லிய ஓசைகளும்
காதுகளுக்குக் கேட்கும்
○
அப்பொழுது நான்
உயிரோடு இருந்தால்
வரலாறு அங்கீகரிக்கும்
வசீகர முகங்களுடன்
சந்தித்துக் கொள்வோம்
அதுவரை எங்கள் கண்ணீரே
எங்களைக்
காயப்படுத்தாமல் இருக்கட்டும்
சென்று வருகிறேன்
○○

## சுதந்திரம்

சிறைப்பிடிக்கப்பட்டு
கூண்டுகளிலே
பூட்டி வைத்திருக்கின்ற
அந்தப் புறாக்களைத்
தயவு செய்து திறந்து விடுங்கள்
அவை
சிறகடித்துப் பறக்கும் போது
தெரிந்து கொள்வீர்கள்
உண்மையான சுதந்திரம்
எதுவென்று
○○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியனும் சிலிர்க்கட்டும்

இந்தத் தேசம்
ஏலம் விடப்படுகிறது
விலை பேசவந்திருப்பவன்
கைகளில்
டொலரும் யென்னும்
இன்னுமா நாங்கள்
பழஞ்சோற்றையே நம்பி
புறங்கைகளை
நக்கிக் கொண்டிருக்கிறோம்
○
எங்கள் வியர்வைகளில்
உருவான ஆக்கங்களை
நாங்களே உரிமை கொண்டாடுவது
எப்போது?
நாங்களே பகிர்ந்து கொள்வது
எப்போது?
இந்த வளங்கள் அனைத்துமே
எங்கள் மயமாவது
எப்போது?
எல்லாமே இங்கு
உபாலி மயம்
ஜெகன் மயம்
நழீம் மயம்
போதாக் குறைக்கு
அமெரிக்க மயம்
ஜப்பானிய மயம்
○
இந்தப் பிரபுத்துவ
இருட்டுக்களைக்
கிழித்தெறியப் போவது
யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முதலாளித்துவ ஏகாதிபத்திய
விச வேர்களை
அழித்தொழிக்கப் போவது
யார்?
○
இழக்க எதுவுமற்ற
எங்கள்
இயந்திரப்படையின்
எழுச்சியினால்தானே
இது சாத்தியம்
○
சோவியத்து நாட்டுக்கு
சொர்க்கத்தை
சுமந்துவந்து தந்த
சூறாவளியே
உன் சுழற்சியின் புறப்பாடு
எந்தத் திசையில் இருந்து
முதலில்
○
என்ன தாமதம்
மூச்சுக்களை சூடாக்குவோம்
கண்ணீரைக் கனமாக்குவோம்
எழுவோம்
ஒருயுகம் காண்போம்
எங்கள் இறுக்கம்
இந்தத் தேசத்தையும்
ஒருமுறை
உலுக்கிப் பார்க்கட்டும்
அதில் சூரியனும்
சிலிர்க்கட்டும்
○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கு இளமையின் துடிப்புக் காணப்படுகிறது
சமகாலத்து நிகழ்வுகள்
ஜப்பார் மனதில் ஏற்படுத்திய
சலனங்களை இத்தொகுதி பதிவு செய்துள்ளது
இப்பதிவுகளினூடே கவிதை நெஞ்சு
ஒன்று தெரிகிறது

அநீதிகளைக் கண்டு துடித்து
எழும் இளமைக் கிளர்ச்சிக்கு
இதில் பல உதாரணங்கள் உள்ளன
உதாரணம்: நினைவுக் குறிப்புகள்,
இளமையின்
இலட்சியமும் சுய இரக்கமும்
கவிதையின் நெகிழ்வுடன்
இணைந்துவர நெஞ்சு
கனியத்தான் செய்கிறது

மெய்ப்பாடுகளை ஆழமான
உணர்வுகள் எனமயங்கும்
பருவத்திலும் கிளம்பும்
தேசம் பற்றிய இலட்சியத்தின்
நிறக் கோலங்கள் மனதைச்
சிலிர்க்க வைக்கின்றன

இத்தொகுதிக்குள் கவிதைகள் சில
உள்ளன; அவைவெகு
விரைவில் ஜப்பாரைக் கவிஞனாக்கட்டும்

— பேராசிரியர் கா. சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org